**சுருக்கம்**

வனம் – மதுரை மாவட்டம் – மேலூர் வட்டம் – 3–பள்ளப்பட்டி கிராமம்– கள்ளிக்குட்டுக்கரடு வன வட்டாரம் – நில அளவை எண்63–ல் உள்ள 9.84.0 எக்டர் நிலம் – தமிழ்நாடு வனச்சட்டம், 1882 (தமிழ்நாடு சட்டம் 5/1882) பிரிவு 16–ன் கீழ் காப்பு வனமாக அமைத்து அறிவிக்கை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம். 14) துறை**

**அரசாணை (நிலை) எண்.55**

**நாள்: 17.03.2023**
**சுபகிருது– பங்குனி, 03**
**திருவள்ளுவர் ஆண்டு–2054**
**படிக்க.:**

1. அரசாணை (நிலை) எண்.58, சுற்றுச்சூழல் மற்றும் வனத்(வனம்.14)துறை, நாள். 09.03.2012.
2. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்), சென்னை–15, கடித எண்.டிஎஸ்2/156/2020, நாள். 22.04.2022.

=======

**ஆணை :**

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் கருத்துருவுடன் பெறப்பட்ட மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், 3–பள்ளப்பட்டி கிராமம், கள்ளிக்குட்டுக்கரடு வன வட்டாரம், நில அளவை எண்63–ல் உள்ள 9.84.0 எக்டர் நிலம் தமிழ்நாடு வனச்சட்டம், 1882 (தமிழ்நாடு சட்டம் 5/1882), பிரிவு 16–ன் கீழான அறிவிக்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதனை தமிழ்நாடு அரசிதழ் நாள் 12.04.2023–ல் ஆங்கிலத்திலும், மதுரை மாவட்டம் அரசிதழ் நாள் 26.04.2023–ல் தமிழிலும் வெளியிடும் பொருட்டு இத்துடன் இணைக்கப்படுகிறது.

2. 12.04.2023–ந் தேதிய தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்படுவதை உறுதி செய்யுமாறு சென்னை அரசு மைய அச்சகத்தின் பணி மேலாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். அறிவிக்கை கிடைக்கப் பெற்றவுடன் அதனை தமிழில் மதுரை மாவட்ட அரசிதழில் வெளியிட நடவடிக்கை எடுக்குமாறு மதுரை அரசு கிளை அச்சக மேலாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

3. மேலும், அச்சிடப்பட்ட தமிழ், ஆங்கில அறிவிக்கை நகல்களை இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கு அனுப்பி வைக்க மைய, கிளை அச்சக பணி மேலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4. அறிவிக்கையானது தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுவதை மதுரை மாவட்ட ஆட்சியர் / முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் கண்காணித்து அறிவிக்கை வெளியிடுவதில் காலதாமதம் இருப்பின், அரசின் கவனத்திற்கு கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சுப்ரியா ஸாஹு**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

<u>பெறுநர்</u>
பணி மேலாளர்,
அரசு மைய அச்சகம், சென்னை – 1.
கிளை மேலாளர், அரசு கிளை அச்சகம், மதுரை.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் ஆணையர்,
நில நிர்வாகம், சென்னை – 5.
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்),
சென்னை – 32.
மாவட்ட ஆட்சியர், மதுரை.
வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர்,
திருவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகம், மதுரை.
மாவட்ட வன அலுவலர், மதுரை.
வன நிர்ணய அலுவலர், போடிநாயக்கனூர்.
<u>நகல்</u>:–
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (LD–IV) துறை,
சென்னை–9.
சட்டத் (Opinion) துறை, சென்னை–9.
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் (மொழிபெயர்ப்பு)துறை,
சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர்,
சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை,
சென்னை–9.
(கோ.எண்.7242/வனம்.14/2022)
இருப்புக்கோப்பு/ உதிரிகள்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

N. [signature]

**பிரிவு அலுவலர்**
20/03/2023

**அரசாணை (நிலை) எண்.55**
**சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம்.14) துறை, நாள். 17.03.2023–ன் இணைப்பு**

| வரிசை. எண். | பதவி மற்றும் அலுவலக முகவரி | ஆங்கிலம் | தமிழ் |
|---|---|---|---|
| 1 | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, சென்னை –9. | 2 | 2 |
| 2 | முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்), சென்னை–32. | 3 | 3 |
| 3 | மாவட்ட ஆட்சியர், மதுரை | 2 | 2 |
| 4 | வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர், திருவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகம், மதுரை | 5 | 5 |
| 5 | மாவட்ட வன அலுவலர், மதுரை | 12 | 12 |
| 6 | வன நிர்ணய அலுவலர், போடிநாயக்கனூர் | 8 | 8 |

**சுப்ரியா ஸாஹூ**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**//உண்மை நகல்//**

N. [signature]

**பிரிவு அலுவலர்**
20/03/2023

**பிற்சேர்க்கை.**

**அறிவிக்கை.**

தமிழ்நாடு 1882–ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 16–ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழ்காணும் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நாற்புற எல்லைகளுக்குள் அடங்கிய நிலப் பகுதியை 13.09.2023–ஆம் நாளிலிருந்தும் அந்நாள் முதற்கொண்டும் காப்பு வனமாக இதனால் அறிவிக்கிறார்.

**விவர அட்டவணை.**

| | | | |
|---|---|---|---|
| 1. | மாவட்டத்தின் பெயர் | : | மதுரை |
| 2. | வட்டத்தின் பெயர் | : | மேலூர் |
| 3. | கிராம எண் மற்றும் கிராமத்தின் பெயர் | : | 3, பள்ளப்பட்டி |
| 4. | வன வட்டாரத்தின் பெயர் | : | கள்ளிக்குட்டுக்கரடு வன வட்டாரம் |
| 5. | நில அளவை எண் | : | **63** |
| 6. | வன வட்டாரத்தின் பரப்பளவு | : | 9.84.0 எக்டேர் |

**நாற்புற எல்லைகள்.**

**வடக்கு.–** இவ்வெல்லையானது, எண்.3, பள்ளப்பட்டி கிராமத்தின் நில அளவை எண்.63–இன் வடமேற்கு மூலையானது, மேற்சொன்ன கிராமத்தின் நில அளவை எண் 64 மற்றும் எண்.9 பொட்டாப்பட்டி கிராமத்தின் நில அளவை எண்.119 ஆகியவற்றுடன் சந்திக்கும் இடத்திலிருந்து தொடங்கி, எண்.3, பள்ளிப்பட்டி கிராமத்தின் நில அளவை எண்கள் 51, 63 மற்றும் 59 மற்றும் எண்.9, பொட்டாப்பட்டி கிராமத்தின் நில அளவை எண் 119 ஆகியன சந்திக்கும் நாற்சந்திப்பு புள்ளியாக உள்ள எண்.3 பள்ளப்பட்டி கிராமத்தின் நில அளவை எண்.63–இன் வடமேற்கு மூலையை அடையும் வரையில், எண்.9, பொட்டாப்பட்டி கிராமத்தின் நில அளவை எண்.119–இன் தெற்கு எல்லை வழியாக பொதுவாக கிழக்கு நோக்கி செல்கிறது.

**கிழக்கு.**– பின்னர், இவ்வெல்லையானது, மேற்சொன்ன கிராமத்தின் நில அளவை எண்கள் 62, 96, 65 மற்றும் 63 ஆகியன சந்திக்கும் நாற்சந்திப்பு புள்ளியை அடையும் வரையில், எண்.3, பள்ளப்பட்டி கிராமத்தின் நில அளவை எண்கள் 51 மற்றும் 62 ஆகியவற்றின் மேற்கு பக்கம் வழியாக பொதுவாக தென்மேற்கு நோக்கி செல்கிறது.

**தெற்கு.**– அதன் பின்னர், இவ்வெல்லையானது, மேற்கு நோக்கி திரும்பி எண்.3, பள்ளப்பட்டி கிராம நில அளவை எண்கள் 65, 64 மற்றும் 63 ஆகியவற்றின் முச்சந்திப்பை அடையும் வரையில், எண்.3 பள்ளப்பட்டி கிராமத்தின் நில அளவை எண்.65–இன் வடக்கு எல்லை வழியாக, செல்கிறது.

**மேற்கு.–** பின்னர், இவ்வெல்லையானது பொதுவாக எண்.3, பள்ளப்பட்டி கிராமத்தின் நில அளவை எண்.64–ன் கிழக்கு வழியாக வடக்கு நோக்கிச் சென்று தொடங்கிய இடத்தை அடைகிறது.

**அனுமதிக்கப்பட்ட உரிமைகள்**

இவ்வன வட்டாரத்தில் உரிமைகள் ஏதும் அனுமதிக்கப்படவில்லை.

**சுப்ரியா ஸாஹூ**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

//உண்மை நகல்//

N. Jain.

பிரிவு அலுவலர்
20/07/2021